# Church of the Assumption, PJ

`நற்செய்தியை எதர்நோக்குடன் நம்புதல்

எதிர்நோக்குடன் வளர்தல்

மாற்கு 1 : 12 - 15

உடனே தூய ஆவியால் அவர் பாலைநிலத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டார். பாலை நிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார் ; அப்பொழுது சாத்தானால் சோசிக்கப்பட்டார்; அங்குக் காட்டு விலங்குகளிடைய இருந்தார் . வானதூதர் அவருக்கு பணி விடை செய்தனர். யோவான் கைதுசெய்யப்பட்டபின் கடவுளின் நற்செய்தியை பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். “காலம் நிறைவேறிவிட்டது . இறையாட்சி நெருங்கி விட்டது; மனம் மாறி நற்நெய்தியை நம்புங்கள்” என்று கூறினார்.

நற்செய்தி அறிவிக்கப்படுவதற்கு முன்பு இயேசு பாஜைவனத்திற்கு அனுப்பட்டதை நற்செய்தி கூறுகிறது.

இந்த பாலைவனம் சவால் மிக்க ஓர் இடம். இங்கு இயேசு சாத்தானால் சோதிக்க பட்டார் . அங்கு அவர் காட்டு மிருகங்களுடன் 40 நாட்கள் இருந்தார் எனக் கூறப்படுகிறது.

அந்நேரத்தில் மனம் தளராமல் இருந்தார். " வானத்தூதர் அவருடன் பணி விடைசெய்தனர். "

சர்வதேச தொற்றுநோய்களின் வழி நாம் மிகவும் துயரத்தில் சூழப்பட்டுள்ளோம். நாம் சோர்வோ விரக்தியோ அடையாமல் இருக்க வேண்டும். நற்செய்தி வழியாக உண்மையில் மனம் திரும்ப அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முழுமனதுடன் நம்பிக்கையுடன் பின்பற்றினால் பயன் அடைவோம்.

**போப்பாண்டவர் பிரான்சிஸ் , 2021 ஆம் ஆண்டிற்கான மடலின்படி......**

தவக்காலம் : நம்பிக்கியைப் புதுப்பித்தல், நம்பிக்கை உடன் அன்பு .

இந்நேரத்தில் நம்பிக்கையின் சிக்கலை குறிக்கிறது.நிச்சியமின்மை உறுதியின்மை நிலைகள் என தோன்றும் போது நம்பிக்கையைப்பற்றி பேசுவது ஒரு சவாலாக அமையும்.

இருப்பினும் ஆண்டவர் வழி பின்பற்றாமல் இருந்தாலும் ஆண்டவர் நம்மை கருணையுடன் வழி நடத்துகிறார்.

ஆண்டவரிடம் ஒப்புரவாகுங்கள் என புனித பவுல் கூறுகிறார் . "ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள்......2 கொரி 5:20 "

ஆறுதல், தைரியம், ஊக்கம் என அக்கைரையுடன் பேசும் வேளையில் எதிர்மறையான இழிசொற்கள், கவலை, சோகம் அல்லது அவதூறான சொற்களால் உரையாடுவது அல்ல....

நம்பிக்கை தருவதற்காக பணிவுடன் அன்பாக இருப்பது நலம். ஒரு புன்னகையுடன் செவி கொடுக்கவும் தயவான வார்த்தைகளால் பேசவும் நம் நேரத்தை ஒதுக்கி தயார் நிலையில் இருக்க வேண்டும்.

**தவக்கால பிரச்சாத்தின் கருப்பொருள் 2021**

**நம்பிக்கையுடன் வாழ்வது.....**

**குடும்பம் மற்றும் சமுகம்.**

தவக்காலப் பிரச்சாத்தைவிட கோவிட் 19 தொற்று நோயின் அதிக தாக்கத்தால் ...நம் சமூகம் மன உளைச்சளால் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளனர். பல சவால்களை எதிர்நோக்கும் வேளையில், நம்பிக்கையுடன் இருக்குமாறு இந்த கருப்பொருள் உணர்த்துகிறது.

**இந்த ' நம்பிக்கை' என்ப து நான், குடும்பம் மற்றும் சமூகம் என மூன்று நிலைகளில் வாழ்ந்து பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.**

நம் இதயங்களில் வாக்குறுதிகள் , ஆற்றல்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆன்மீக வழியில் இவற்றை உணர்ந்து மறுபரிசீலிக்க நம்பிக்கை எனும் சக்தியை வெளிபடுத்துகிறோம் நம் முகத்தில் ஒளிரும் ஒரு புன்னகை எப்போதும் நம்பிக்கையின் வெளிபாடாகத் தெரியும் .

தவக்காலத்தில் நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளவும் நம்பிக்கையுடன் வாழ துணைபுரிகிறது.

**நம்பிக்கை**.....குடும்பத்தில் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு செயல்வடிவம் வண்ணமயமாக உருவாக்குவதற்கு தொடர்புமுறையும் நம்பிக்கைக்கு உட்பட்டதாகும் .குடும்ப உறுப்பினர்கள் உற்றார்கள் , நற்செய்தியின் வழி நம்பிக்கையுடன் வளர நினைவூட்டப்படுகிறது. குடும்ப ஜெபத்தின் போது ....நமது நோக்கங்களுக்காகவும் மற்றும் நம்மை புது ப்பித்து க் கொள்ளவும் ஜெபிக்க வேண்டும். தவக்காலத்தில் மட்டும் அல்லாமல் நம்பிக்கையுடன் தொடர்ந்து பிராத்தனை செய்ய வேண்டும்.

**நம்பிக்கை** - சமூகம் நாம் நம்பிக்கையுடன் குடும்பத்தின் வழியாக சமூகத்துடன் பகிர்ந்து கொள்கிறோம் : அ.கி.ச உறுப்பினர்கள், அண்டை அயலார் மற்றும் பணியிடத்தில் உள்ளவர்கள் என இவர்களுடன்

பயணிக்கிறோம்.இவை உத்வேகம், ஊக்கம் அனைத்தும் மேலோங்க நம்பிக்கை என்பது அடிப்படையாகும்.

விமர்சனங்கள் புகார்கள் இருப்பினும் அவற்றை கடந்த செல்ல நம்பிக்கை நிறைந்த திட்டங்கள்தான் தீர்வாகிறது. உண்மை நிலயை அறியவும் நம்பிக்கை மிகவும் துணை புரிகிறது. தவகாலத்தில் புதிய இயல்பான நிலைகளை புரிந்து உறவாடவும் நம்பிக்கைதான் முதன்மையாக கருதப்படுகிறது.

பேசும் வார்த்தைகளை நம் செயலாக்க நடவடிக்கையால் மேலோங்குகிறது.

இந்த ' நம்பிக்கை' என்பது நான், குடும்பம் மற்றும் சமூகம் என மூன்று நிலைகளில் வாழ்ந்து பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

நம் இதயங்களில் வாக்குறுதிகள் , ஆற்றல்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆன்மீக வழியில் இவற்றை உணர்ந்து மறுபரிசீலிக்க நம்பிக்கை எனும் சக்தியை வெளிபடுத்துகிறோம். நம் முகத்தில் ஒளிரும் ஒரு புன்னகை எப்போதும் நம்பிக்கையின் வெளிபாடாகத் தெரியும் .தவக்காலத்தில் நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளவும் நம்பி க்கையுடன் வாழ துணைபுரிகிறது.

நம்பிக்கை.....குடும்பத்தில் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு செயல்வடிவம் வண்ணமயமாக உருவாக்குவதற்கு தொடர்புமுறையும் நம்பிக்கைக்கு உட்பட்டதாகும் . குடும்ப உறுப்பினர்கள் உற்றார்கள் நற்செய்தியின் வழி நம்பிக்கையுடன் வளர நினைவூட்டப்படுகிறது.

தனது பொதுக்கூட்டத்தில் இயேசு இயற்கையின் கூறுகளைப் பயன் படுத்துகிறார். அறிவாந்தவர் மட்டும் அல்லாமல் , இயற்கையை ஒப்பிட்டு பல உவமைகளின் வழி சீடர்களிடம் பகிர்ந்து கொள்கிறார். இயற்கையை தன் வசமாக்கி கொள்கிறார்....( மத்தேயூ 14: 22 - 33 ; மாற்கு 6 : 45 - 52 ; லூக்காஸ் 8 : 22 - 25 ; அருளப்பர் 6 : 16 - 21 )

தனது மீட்பின் திட்டத்தில் இயற்கைத் தன்மைகளை உணரவும் குழந்தைகளுக்கு எடுத்து சொல்கிறார். தந்தை ஒரு போதும் கைவிட மாட்டார் என நம்பிக்கை ஊட்டுக்கிறார்.

மக்களின் நிலைத்தன்மையை விவாதிக்கும் போது , பூமியின் சுற்று சூழல் அதன் தன்மைகளையும் வளங்களையும் மற்றும் அதன் நிலைபாடுகளையும் மீண்டும் பாதுகாப்பது பற்றியும் பேசுகிறார்கள். டோகாட் :263.

வருங்கால சந்ததினர்க்காக நாம் விட்டு சென்ற உலகத்தைப் பற்றி சிந்திக்கும்போது நாம் வித்தியாசமாக பாக்ககிறோம். நமக்கு உலகம் ஒரு

பரிசுப் பொருளாக கிடைக்கப் பெற்றது. மக்களிடம் பகிந்து கொள்வது என்பதை உணர வேண்டும். பயனற்ற வழியில் உலகத்தை முற்றிலும் பாக்க முடியாது. திறைமையான செயல்திறன் , உற்பத்தியும் தனிப்பட்ட வகையில் முற்றிலும் உதவுகின்றன - போப் பிரான்சிஸ் ( லா டத்தோசி 159. )

**லா டத்தோசி 5 ஆண்டுகளுக்கு பிறகு -போப் பிரான்சிஸ் இயற்றிய ஜெபம்.**

அன்பானஆண்டவர், வானத்தையும் பூமியையும் படைத்தவர் எல்லா படைப்புகளும் அதில் அடங்கும்.

உங்கள் சாயலில் படைத்து எல்லாம் வழிநடத்துவதற்கு தயார் படுத்தினீர்.

சூரியன், நீர் மற்றும் நிலம் ஆகியவற்றைப் படைத்து ஆசீர் வதித்தீர்கள்.

மனம் திறந்து அளித்த உங்கள் படைப்பின் கொடைகளை ஏற்று,

நம் வீடு நமக்கு மட்டும் சொந்தமல்ல எதிர்கால தலைமுறையினர்க்கு சொந்தமானது , ஆகவே அவற்றைப் பாதுகாக்க உதவும்.

ஒவ்வொரு நபருக்கும் தேவையான உணவு மற்றும் வளங்களை பாதுகாக்க உதவும்.

ஏழ்மையில் உள்ளவர்களுக்கும், விடுபட்டவர்களுக்கும் துணையாக இருக்க வேண்டுவோம்.

பயம், பதட்டம் மற்றும் தனிமை உணர்வுகள் மனமாற்றமடைய நம்பிக்கையுடன் மாற்றுவோமாக.

ஒற்றுமையாக இந்த தொற்றுநோயின் விளைவுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க எங்களுக்கு உதவும்.

பொதுவாக மாற்றங்களை எற்றுக்கொள்ள தையரியம் மற்றும் அரவணைப்பும் கொடுங்கள்.இந்த பூமியின் அழுகை சத்தமும் ஏழைகளின் அழுகுரலும் உணர்ந்து ஒன்றோடு கைகோர்த்து நடப்போம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக ஜெபிப்போமாக.

ஆமென்.